செய்தி வெளியீடு எண்: 237 நாள்: 17.04.2013

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

## செய்தி வெளியீடு

**புதிய தொழில் நுட்ப செயலாக்க மையம் ஏற்படுத்துதல்**

தமிழகத்தில் புதிதாக தொடங்கப்படுகின்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. புதிதாக தொடங்கப்படுகின்ற தொழிற்சாலைகள் மற்றும் தற்போதுள்ள தொழிற்சாலைகளில் புதிய தொழில் நுட்பத்தைப் புகுத்தி கழிவுகள் அற்ற அல்லது குறைந்த அளவு கழிவுகளை வெளியேற்றும் செயல்முறைகளைப் பயன்படுத்தவும், தீங்கு விளைவிக்கின்ற கழிவுகள் அற்ற முறைகளைப் பின்பற்றவும், வெளியேற்றப்படும் கழிவுகளை மறுபயன்பாடு செய்யவோ அல்லது மறுசுழற்சி செய்யவோ வலியுறுத்துவதோடு, கழிவுகள் வெளியேற்றம் இல்லாத சிறந்த தொழில் நுட்பத்தை பயன்படுத்த தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வலியுறுத்துகின்றது. புதிய வகை தொழிற்சாலைகள் பெருகி வருவதாலும், புதிய தொழில்நட்பத்தைப் பயன்படுத்துவதாலும், புதிய வகைக் கழிவுகளை சுத்திகரிப்பு செய்வது தொழிற்சாலைகளுக்கு மட்டுமல்ல, மாசுக் கட்டுப்பாடு தொடர்பான சட்டங்களை நடைமுறைபடுத்தும் வாரியத்திற்கும் இது ஒரு சவாலாக உள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் தொழில் நுட்ப செயலாக்க மையத்தினை (Technology Demonstration Centre) ரூ.5 கோடி செலவில் ஏற்படுத்தும் என சட்டமன்றத்தில் அறிவிப்பு ஒன்றினை வெளியிட்டார்கள். அதன்படி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், இந்திய தொழில் நுட்ப மையத்துடன் (Indian Institute of Technology) இணைந்து புதிய தொழில் நுட்ப செயலாக்க மையத்தினை இந்திய தொழில் நுட்ப மைய வளாகத்தில் ஏற்படுத்தியுள்ளது. இம்மையம் செயல்படுவதற்கான, புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding). இன்று (17/04/2013) மாண்புமிகு

சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் இந்திய தொழில் நுட்ப மையத்துடன் கையெழுத்தானது. இந்த நிகழ்ச்சியில், சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைவர், உறுப்பினர் செயலர் மற்றும் உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

இம்மையத்தில், புதிய ஆராய்ச்சிகள் மற்றும் அதனைத் தொடர்ந்து செயலாக்கம் செய்வதற்காக, அண்ணா பல்கலைகழகம், இந்திய தொழில் நுட்ப மையம் போன்ற அங்கீகரிக்கப்பட்ட மையங்களுடன் இணைந்து ஆராய்ச்சியினை மேற்கொண்டு, தொழிற்சாலைகள் அதனை நடைமுறைபடுத்தும் வகையில் இயங்கும். இம்மையத்தை வழிநடத்தி செல்ல, ஒரு தொழில் நுட்ப குழு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைவர் அவர்களின் தலைமையில் வாரியத்தின் உறுப்பினர் செயலர் மற்றும் விஞ்ஞானிகளை கொண்டு அமைக்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த புதிய மையம் செயல்படத் தொடங்கிய பின்னர், தொழிற்சாலைகள், குறிப்பாக சிறு மற்றும் குறு தொழிற்சாலைகளால் ஏற்படும் காற்று வெகுவாகக் குறைந்து தமிழ்நாட்டின் சுற்றுச் சூழல் மேம்படும்.

தலைவருக்காக

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**